# S.C. No. 226 / 2018

# 03.01.2023

**அ.த.சா.1, திரு. சூசை அருள், த/பெ. சந்தியாலு, வயது 73**

**சாட்சி**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 19.01.2013 அன்று காலை 11.30 மணியளவில் நான் துராப்பள்ளத்திலுள்ள எனக்கு சொந்தமான நிலத்தில் உழுதிக்கொண்டிருந்தேன். மேற்படி எனது நிலத்தின் சர்வே எண் 19/5 ஆகும். பக்கத்தில் எனது நிலமுள்ளது. மேற்படி எனது நிலம் சர்வே 19/5 நான் டிராக்டர் வைத்து மேற்சொன்ன நேரத்தில் உழுதுக்கொண்டிருந்தேன். டிரைவர் பெருமாள் என்பவர் டிராக்டரை ஓட்டினார். நானும் எனது மகன் ரீகன்பால், எனது மருமகன் சுந்தரப்பாண்டியன் மற்றும் எனது புரோக்கர் இராமதாஸ் ஆகியோர்கள் அங்கு இருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் ஓடிவந்து என்னை பார்த்து தேவுடியா பையா எங்கிருந்து வந்து இங்கு வந்து நிலம் வாங்குவாய் என்று அசிங்கமாக திட்டி மேலும் இனிமேல் வந்தால் கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். துரைசாமி எனது சட்டையை பிடித்து மண்வெட்டியால் இடது தோள்பட்டை மற்றும் இடது கண் நெற்றியின் மீதும் அடித்து காயப்படுத்தினார். சிவா கடப்பாறையை எடுத்து வந்து என்னை குத்த ஓடிவந்தார். முல்லைவேந்தன் இரும்புக் கம்பியால் எனது பின் முதுகில் தாக்கினார். அதனால் நான் நிலைகுலைந்து போய் எனது மருமகனின் காரில் உட்கார்ந்து கொண்டேன். அப்போது ஆஜர் எதிரிகள் காரின் கண்ணாடியை அடித்து உடைத்து எங்களை மிரட்டினார்கள். அவர்கள் இந்தப்பக்கம் வந்தால் வெட்டி புதைத்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். அதன் பின்னர் நாங்கள் ஆரம்பாக்கம் காவல் நிலையம் சென்று

புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் என்னால் வலி தாங்க முடியாததால் என்னை எனது மருமகன் சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

## S.C. No. 226 / 2018

## 03.01.2023

**அ.த.சா.2, திரு. ரீகன் பால், த/பெ. சூசை அருள், வயது 40**

**சாட்சி**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். அ.த.சா.1 எனது தகப்பனார். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 19.01.2013 அன்று காலை 11.30 மணியளவில் துராப்பள்ளத்திலுள்ள எலாவூரில் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான நிலமுள்ளது. நான், எனது தகப்பனார், எனது மச்சான் சுந்தரப்பாண்டியன் மற்றும் டிரைவர் பெருமாள் ஆகியோர்கள் அப்போது அங்கிருந்தோம். டிரைவர் பெருமாள் என்பவர் டிராக்டரை ஓட்டினார். அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் ஓடிவந்து எங்களை பார்த்து அந்த நிலத்தை தங்கள் நிலம் என்றும், ஏன் உழுகிறீர்கள் என்று அசிங்கமாக பேசினார்கள். அப்போது துரைச்சாமி எனது தகப்பனாரை மண்வெட்டியால் தோள்பட்டையில் அடித்தார். எதிரி சிவா கடப்பாறையை எடுத்து வந்து எனது தகப்பனாரை குத்த ஓடிவந்தார். முல்லைவேந்தன் இரும்புக் கம்பியால் எனது தகப்பனாரை பின்பகுதியில் தாக்கினார். நாங்கள் அனைவரும் பயந்து போய் அங்கிருந்த எனது மச்சானின் காரில் உட்கார்ந்து கொண்டோம். அப்போது ஆஜர் எதிரிகள் காரின் கண்ணாடியை அடித்து உடைத்தார்கள். அதன் பிறகு எனது தகப்பனார் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார். எனது தகப்பனாரை ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

# S.C. No. 226 / 2018

# 03.01.2023

**அ.த.சா.3, திரு. சுந்தரப்பாண்டியன், த/பெ. ஜோசப் பாண்டியன், வயது 41**

**சாட்சி**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.த.சா.1 எனது மாமனார், அ.த.சா.2 எனது மைத்துனர். கடந்த 19.01.2013 அன்று காலை 11.00 மணியளவில் துராப்பள்ளத்திலுள்ள எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான நிலத்தில் நானும், எனது மாமனார், எனது மைத்துனர், டிரைவர் பெருமாள் மற்றும் இராமதாஸ் ஆகியோர்கள் இருந்தோம். டிரைவர் பெருமாள் டிரக்டர் வைத்து உழுதுக்கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் அங்கு வந்து அ.த.சா. 1 ஐ அசிங்கமாக திட்டி அவரை தாக்கினார்கள். அப்போது துரைச்சாமி அ.த.சா.1 ஐ மண்வெட்டியால் முதுகில் அடித்தார். எதிரி சிவா கடப்பாறையை எடுத்து வந்து அ.த.சா. 1ன் தோள்பட்டையில் அடித்தார். நாங்கள் அனைவரும் உடனே காரில் சென்று உட்கார்ந்து கொண்டோம். அப்போது ஆஜர் எதிரிகள் காரின் கண்ணாடிகளை உடைத்தார்கள். அதன் பிறகு அங்கிருந்து காரில் காவல் நிலையத்திற்கு சென்றோம். மேற்படி கார் என்னுடையது. அந்தக் காரின் பதிவெண் TN 05 AP 5477 என்னிடம் காட்டப்படுவது எனது காரின் RC புத்தகத்தின் நகல் ஆகும். அதன் பின்னர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு அ.த.சா.1 ஐ ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்த்தோம். காரை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். காரை காவல் நிலையத்தில் ஒப்படைத்ததற்கு மகஜர் தயார் செய்தார்கள். காருடன் எனது காரின் RC புத்தகத்தின் நகல், காரை சரிசெய்ததற்கான இரசீது, Tax Voice மற்றும் இன்சூரன்ஸின் பாதித் தொகை

பெற்றதற்கான ஆவணம் ஆகியவற்றை ஒப்படைத்தேன். அந்த மகஜர் மற்றும் மேற்சொன்ன நகல்கள் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி காரை மோட்டார் ஆய்வாளர் ஆய்வு செய்த போதும் நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

# S.C. No. 226 / 2018

# 03.01.2023

**அ.த.சா.4, திரு. பெருமாள், த/பெ. சுப்பய்யா, வயது 38**

**சாட்சி**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சென்னை புழலில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். அ.த.சா.1 முதல் அ.த.சா.3 வரையுள்ளவர்கள் தெரியும். அ.த.சா.1 இடத்தில் நான் டிரைவராக வேலை பார்க்கிறேன். கடந்த 19.01.2013 அன்று காலை 11 மணி முதல் 11.30 மணியளவில் துராப்பள்ளம் எலாவூரிலுள்ள அ.த.சா.1 -ன் குடும்பத்திற்கு சொந்தமான நிலத்தில் நான் டிராக்டரால் உழுதுக்கொண்டிருந்தேன். அப்போது அ.த.சா.1 முதல் அ.த.சா. 3 அங்கிருந்தார்கள். ஆஜர் எதிரிகள் அங்கு வந்து சண்டை போட்டு அ.த.சா.1 ஐ அடித்தார்கள். அப்போது ஆஜர் எதிரி துரைச்சாமி என்னை வண்டியை நிப்பாட்ட சொன்னார். வண்டியை நான் நிறுத்திவிட்டேன். ஆஜர் எதிரிகள் அங்கிருந்த சுந்தரப்பாண்டியனின் கார் கண்ணாடியை உடைத்தார்கள். நான் அங்கிருந்து டிராக்டர் எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

# S.C. No. 226 / 2018

# 03.01.2023

**அ.த.சா.5, திரு. கோபி, த/பெ. மோகன் ராஜ், வயது 51**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஆரம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் ஆரம்பாக்கம் காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது என்னிடம் மேற்சொன்ன கையெழுத்தை வாங்கினார்கள். எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரிலுள்ள எனது கையெழுத்து (இரண்டாம்) அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை பரிசீலிக்க அனுமதி வழங்கப்படுகிறது.**

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 20.01.2013 அன்று துராப்பள்ளதிலுள்ள அ.த.சா.1 ற்க்கு சொந்தமான நிலத்தில் 19.01.2013 அன்ற அ.த.சா.1 ஐ எதிரிகள் தாக்கி அ.த.சா.3-ன் காரை உடைத்து சேதப்படுத்தினார்கள் என்றும், அந்த வழக்கு சம்பந்தமாக ஆரம்பாக்கம் காவல் ஆய்வாளர் எனது முன்னிலையிலும், சாட்சி பழனி முன்னிலையிலும் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் கையெழுத்து செய்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**